
கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்!
இயேசு
உங்களை
நேசிக்கிறார்
ஆகஸ்ட், 2025
நீதிமான்களின் பாதையைச்
செம்மைப்படுத்துகிற
மகா நீதிபரர்!
AUGUST 2025



நீதிமான்களின் பாதையைச் செம்மைப்படுத்துகிற

மகா நீதிபரர்!

"நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்." – ஏசாயா 26:7

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, இதில் இரண்டு நபர்களைப் பார்க்கிறோம். 1. நீதிமான். 2. மகா நீதிபரராகிய கர்த்தர். நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது. இவன் நீதிமான். ஆனால் தேவனோ மகா நீதிபரர்.

கொரோனா நாட்களில் உங்களுக்கு லேசாகச் சளி, இருமல் வந்தவுடனே டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். நீங்கள் labக்குப் போய் test பண்ணினால், கொரோனா இருக்கிறது. எத்தனை சதவீதம் இருக்கிறது? மருத்துவனையில் அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது வீட்டிலிருந்தே தனிமைப் படுத்திக்கொள்ள வேண்டுமா? என்று சொல்லுவார்கள் அல்லவா!



சகோதரன் J. ஆலன்பால்

மருத்துவமனையில் உள்ள பரிசோதனை நிலையத்தில் உங்களுக்குள்ள சளியில் எவ்வளவு கிருமிகள் உள்ளன என்பதை விரிவாகக் காட்டுகிறது. ஆகவே அதைச் செவ்வைப்படுத்துவதற்கு உடனடியாகத் தேவையான மருந்துமாத்திரைகளைக்

கொடுக்கிறார்கள். அப்பொழுது நோய்க் கட்டுப்பாட்டிற்குள் வருகிறது.

நம்முடைய தேவனுடைய கண்கள் மைக்ரோஸ்கோப் உடைய கண்களைப் போன்றது. அவர் மகா நீதிபரர். மிகவும் நீதிபரர். ஒருவரைப் பார்த்து, 'நல்லவர்' என்று சொல்லுகிறோம். மற்றொருவரைப் பார்த்து, "இவர் ரொம்ப ரொம்ப நல்லவர்" என்று சொல்லுகிறோம். கர்த்தர் மிகவும் நல்லவரும் துதிக்குப் பாத்திரராகவும் இருக்கிறார்.

அதைப்போல நீங்கள் நீதிமான்களாய், இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்களாய் செம்மையாய் நடக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். ஒருவரும் உங்களிடம் குறை கண்டுபிடிக்க முடியாது. வேதம்



வாசிப்பதிலும், ஜெபத்திலும், தசமபாகம் கொடுப்பதிலும் உங்களுக்குக் குறை இல்லை. பொருத்தனைக் காணிக்கைகளைச் சரியாகச் செலுத்துகிறீர்கள். அதிகாலையில் எழுந்து கர்த்தரை ஆராதிக்கிறீர்கள். ஆலயத்திற்குத் தவறாமல் செல்லுகிறீர்கள். பிள்ளைகளைச் சரியாக வளர்க்கிறீர்கள். பெற்றோரைக் கனம்பண்ணுகிறீர்கள். அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியைச் சரியாகச் செலுத்துகிறீர்கள். எல்லாவற்றையும் நீங்கள் சரியாய்ச் செய்வதினால் நீதிமான்களாயிருக்கிறீர்கள். உங்கள் பாதைகளைக் குறித்து வேதம் சொல்லுகிறது: நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது.

உங்களுடைய பாதை செம்மையாயிருக்கிறது. ஆனால் smooth ஆக இல்லை. நீதி செய்கிறவர்களாக இருப்பார்கள். ஆனால் அதினிமித்தம் வரும் எதிர் வினைகள், எதிர்ச் செயல்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டியது இருக்கும்.

நீதிமானாய் இருக்கிற உங்கள் வழிகளில் மனிதர்கள் குறுக்கிடுகிறார்கள். உங்களுடைய பாதை நேர்த்தியாக இருக்கிறது. ஆனால் அதில் மனிதர்கள் குறுக்கிடுகிறார்கள்.

எஸ்தர் ராஜாத்தி சரியாய் நடந்தார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் ஆமான் குறுக்கிட்டார். இதில் பலவிதமான போராட்டங்கள், தீமைகள் போன்ற காரியங்களை மனிதர்கள் விதைப்பதினாலே உங்கள் பாதை smooth ஆக இல்லை. நீதிமானாய்

இருந்தாலும் பாடுபட வேண்டியது இருக்கிறது. மனிதர்களால் வருகிற போராட்டம் ஒரு பக்கம், அந்தகார வல்லமைகளால் வருகிற போராட்டம் ஒரு பக்கம் இருக்கிறது.

இப்பொழுது மகா நீதிபரர் இறங்கி வருகிறார். சாலையைப் போட்டு, "அது நன்றாக இருக்கிறது'' என்று சொன்னாலும் ரோடு ரோலர்



ஓடினால்தான் கார் போவதற்குச் சாலை ஏற்றதாய் இருக்கும். இல்லையென்றால் கார் ஓட்டும்போது குதித்துக் கொண்டே செல்லும். மகா நீதிபரர் தம்முடைய நீதியின்படி அவர் முன்னே நடந்து போகிறார். உங்கள் முன்பாக இருக்கிற பாதையைச் செவ்வையாய் மாற்றுகிறார். ''உங்கள் பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது" என்பதைப்போல மாறுகிறது. இந்தச் செயல்பாட்டைச் செய்வதற்குக் கர்த்தர் இரங்குகிறார்.

கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்!

''கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.''
-ஏசாயா 26:4

எந்தச் சூழ்நிலையிலும் செம்மையாயிருக்கிற நீங்கள் அவரை நம்புங்கள்; உங்கள் பாதையிலுள்ள பழுதை நீக்கி, அதைச் செவ்வைப்படுத்தப் போகிறார். மனிதர்களை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர்; ஆனால் செழிப்பான இடத்தில் கொண்டு வந்து விட்டீர் (சங்கீதம் 66:12). அப்படிப்பட்ட பாதையாக உங்கள் பாதையைக் கர்த்தர் மாற்றுவார்.

எந்த விதமான போராட்டங்கள், சஞ்சலமான சூழ்நிலைகள் வந்தாலும், நீதிமானாகிய நீங்கள் கர்த்தர்பேரில் வைத்திருக்கிற நம்பிக்கையை மாற்றவே மாற்றாதீர்கள்.

''கர்த்தர் இதை ஏன் எனக்கு அனுமதித்தார்?'' என்று அவருடைய உள்ளத்தை உடைக்காதிருங்கள். முறுமுறுக்காமல், ''கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" (சங்கீதம் 138:8). கர்த்தர் என் பாதையைச் செவ்வைப்படுத்துவார் (நீதி. 3:6). மகா நீதிபரராகிய கர்த்தாவே, நீர் நீதிமானுடைய பாதையைச் செவ்வைப் படுத்துகிறீர்.

Sports Day வரும்போது ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் 4 பிள்ளைகளை ஆசிரியர்கள் அழைப்பார்கள். நாங்கள் ஓடிப்போவோம். எங்களிடம் ஆசிரியர், ''மைதானம் முழுவதும் சுத்தமாக இருக்கிறது. ஆனாலும் ஆங்காங்கே சில கற்கள் இருக்கிறது. அது ஓட்டப்

பந்தயத்தில் ஓடுகிறவர்களுக்கு இடையூறாக இருக்கும். ஆகவே அந்த ரோலரை இழுத்துக்கொண்டு நடங்கள்" என்று சொல்வார்கள். அந்த ரோலரைத் திரும்பத் திரும்ப உருட்டும்போது, மைதானம் மிகவும் அருமையாக மாறிவிடும்.

அதைப்போல உங்கள் வாழ்க்கையில் உள்ள பாதையை மகாநீதிபரரே பக்குவப்படுத்தப் போகிறார். பண்படுத்தப் போகிறார். அழகுப்படுத்தப் போகிறார்.

இந்தச் சூழ்நிலையில் நாம் நம்முடைய நீதியை நம்பி ஒருநாளைத் துவங்கக் கூடாது. மகாநீதிபரர் நமக்கு முன் செல்ல வேண்டும். ஆகவேதான் தேவன் மோசேயிடம், ''என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்'' (யாத். 33:14) என்றார்.

ஒருநாள் பிறப்பிப்பதை நீ அறியாயே (நீதி. 27:1). ஒருநாளில் துன்பங்கள், போராட்டங்கள், உபத்திரவங்கள் என ஆங்காங்கேயிருந்து முளைத்து வரும். ஆனால் மகாநீதிபரர் உங்களுக்கு முன்பாக நடந்துசென்றால், அந்த நாளை நீங்கள் எளிதாகக் கடந்துச் செல்லலாம். உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் (சங்கீதம் 18:29).

அதிகாலையில் ஆண்டவர் சமுகத்தில் அமர்ந்து, "என்னுடைய நீதி என்று ஒன்றுமில்லை கர்த்தாவே, உம்முடைய நீதியை நம்பி வருகிறேன். மகாநீதிபரராகிய நீர் எனக்கு முன் செல்லுவீராக. நீர் காரியங்களை வாய்க்கப்பண்ணுவீராக. இந்த நாளில் என்னென்ன தொல்லைகள் முளைக்க இருக்கிறதோ, அவற்றையெல்லாம் ஒழித்துப்போட்டு எனக்கு முன் செல்லுவீராக" என்று ஜெபிக்கவேண்டும்.

நாம் ஒருநாளும் ஆண்டவருக்கு முன்பாகச் சென்று அவருக்கு ஆலோசனைச் சொல்லக் கூடாது. அப்படிக் கூறியபோது, ஆண்டவர் பேதுருவைப் பார்த்து, 'எனக்குப் பின்னாகப் போசாத்தானே' என்றார்.

மீட்பர் இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தபோது, அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும், தம்முடைய நீதியை நம்பிப் புறப்படாமல் பிதாவை நம்பி,



அதிகாலை இருட்டோடே எழுந்திருந்து ஆண்டவருடைய சமுகத்திற்குச் சென்றார். நீதிபரராகிய பிதாவை முன்னே

போக வேண்டுமென்று சொல்லி அவர் காத்திருந்து, அதன்பின்பு தன்னுடைய பணியைச்செய்தார்.

அவர் பாவஞ் செய்யவில்லை, அவர் வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1பேதுரு 2:22). ஆனாலும்கூட பிதாவைச் சார்ந்து காலையில் ஜெபம்பண்ணிப் புறப்பட்டார். அதுதான் நமக்கு நல்ல முன்மாதிரி. பிதாவாகிய தேவனை உங்களுக்கு முன் வைத்து ஓடுங்கள். அப்பொழுது உங்களுடைய பாதைச் செவ்வையாயிருக்கும்.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் நீதிமானாய் இருக்கிறேன் என்று எண்ணுகிறீர்கள். ஆனால் தேவன் அதை எண்ணுகிறாரா? என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும்.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." - நீதி. 28:13

உங்கள் வாழ்க்கையில் பாவங்களைச் செய்தீர்கள். நீங்கள் அறிக்கை செய்து, இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் அந்தப் பாவங்களை விட்டு விட்டீர்களா?

அநேகர் நீதிமான்களாக இருக்கிறார்கள். ஒருநாள் விழுந்துவிட்டு திரும்ப நீதிமான்களாக மாறிவிடுகிறார்கள். ஆனால் கர்த்தரிடமிருந்து இவர்கள் ''இரக்கம் பெற்றார்கள்'' என்கிற certificate வரவில்லை. இரக்கம் பெற்ற நீதிமான்கள் என்று வரவேண்டும். ஆண்டவரை அறிந்தும் தவறு செய்யும்போது, அவருடைய இருதயத்தில் ஆழமாய்க் குத்தி வேதனைப்படுத்தும். அந்த வேதனை 3 layer உள்ளே போனதைப்போல இருக்கும். ஒரு பாவத்தை உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் சேர்ந்து விடும்போது அவருக்குத் தெரியும். ஆகவே மூன்று முறை உறுதிப்படுத்துதல் அவருக்குத் தேவைப்படுகிறதாய் இருக்கலாம்.

ஒருவேளை நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். "ஆண்டவரிடம் சென்று காலில் விழுந்து, இனி பொய் சொல்ல மாட்டேன்" என்று அழுது ஜெபிக்கிறீர்கள். "ஆண்டவர் என்னை மன்னித்துவிட்டார்" என்று சொல்லுகிறீர்கள். திரும்ப ஒரு சூழ்நிலை வரும்போது பொய் சொல்லி விடுகிறீர்கள். திரும்ப ஆண்டவரிடம் வந்து ஆண்டவரே, ''என்னை மன்னித்து விடுங்கள்'' என்று சொல்லுகிறீர்கள். ஆண்டவர் மன்னிக்கிறார். ஆனால் அவரிடம் உங்களுக்கு இரக்கம் கிடைக்கவில்லை. அவர் உங்களைக் குறித்து, இவர்கள் பொய் பேசுவார்கள், திரும்ப வந்து மன்னிப்புக் கேட்பார்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பார். ஆனால் நீங்கள் உங்களை நீதிமான் என்று எண்ணிக்கொண்டு இருப்பீர்கள்.

நீங்கள் ஆண்டவரிடம் இரக்கத்தைப் பெற்றால் உங்களுடைய பழைய பாவங்களைக் கர்த்தர் கடலின் ஆழத்தில் போட்டுவிடுவார். பூமியிலிராதபடிக்கு அவருடைய

ஜனத்தின் நிந்தையை நீக்கிவிடுவார் (ஏசாயா 25:8). ஆகவே ஒரு காரியத்தில் மனம்திரும்பியதற்கு ஆண்டவரிடம் 3 முறை உறுதிப்படுத்த வேண்டியதாய் இருக்கலாம்.

மீட்பர் இயேசுகிறிஸ்து செம்மையாக இருந்தாலும் அவர் விசேஷவிதமாக மூன்று முறை பிசாசினால் சோதிக்கப்பட்டார் என்று எழுதியிருக்கிறது. பேதுரு தவறு செய்துவிட்டார்; சத்தியம், பண்ணிவிட்டார்; 'இவரை நான் அறியேன்' என்று சபித்துவிட்டார்; மறுதலித்தார்; திரும்ப மனங்கசந்து அழுது, ஆண்டவரிடம் பேதுரு மன்னிப்புக் கேட்டு விட்டார். ஆனால் மீட்பர் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு வந்து பேதுருவைத் தனியாக அழைத்து, "உன்னிடம் பேச வேண்டும்" என்றார்.

"அவர்கள் போஜனம்பண்ணின பின்பு, இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.

இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்."

– யோவான் 21:15-17



ஏன் ஆண்டவர் மூன்று முறை கேட்டார். பேதுருவின் சரீரத்திலிருந்து இந்த வார்த்தை வருகிறதா? அவருடைய ஆத்துமாவிலிருந்து இந்த வார்த்தை வருகிறதா? அவருடைய ஆவியிலிருந்து இந்த வார்த்தை வருகிறதா? என்பதைப் பார்க்கும்படி

கேட்டிருப்பார் என நான் எண்ணுகிறேன். ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றும் கர்த்தரிடம் பதில் சொல்ல வேண்டியது இருக்கிறது. நாம் வெளிப்படும்போதும் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் குற்றமற்றவர்களாய் இருக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறதே.

முதல் இரண்டு முறை அன்பாயிருக்கிறாயா? என்று கேட்டார். மூன்றாவது முறை நேசிக்கிறாயா? என்று கேட்டார். அவர் ஆத்தும நேசராய் இருக்கிறபடியால் நேசிக்கிறாயா? என்று கேட்டார். ஆத்துமாவில் ஆண்டவரை நேசிக்கிறீர்களா என யோசித்துப் பாருங்கள். நேசம் என்பது மரணத்தை விடக் கொடியது. அன்பு என்பது சிறியது. உண்மையாகவே நேசிக்கிறாயா? என்று கேட்டார்.

அன்பு என்பது தகப்பனுடைய அன்பைக் குறிக்கும். ஆனால் நேசம் என்பது மணவாளன் மணவாட்டிக்கு இடையே இருப்பதாகும். ஆத்தும நேசர் அவரே நித்திய மணவாளன். சபை மணவாட்டியைப்போல இருந்து, மணவாளனை நினைத்து வாழுகிற ஒரு எண்ணம், நினைவு எல்லாம் இருக்க வேண்டும். அதுதான் நேசம்!

ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றும் பதில் கூறினால் ஆண்டவர் சரி என்று விட்டுவிடுகிறார். உங்கள் வாழ்க்கையிலே பொய் பேசுவதை விட்டுவிட்டால் அடுத்து ஒரு டெஸ்ட் வரும். சரியாய் உண்மையைச் சொல்ல வேண்டியதிருக்கும். அந்நேரத்திலே உண்மையைச் சொல்லுங்கள். இரண்டாவது ஒரு டெஸ்ட் வரும். அதிலும் உண்மையைச் சொல்லுங்கள். அதன் பின்பு மூன்றாவது வரும் டெஸ்ட்டையும் நீங்கள் ஜெயிக்க வேண்டும். பிதா, குமாரன், ஆவியானவர் மூவருக்கும் உறுதிப்படுத்துதல் வேண்டியதாயிருக்கும் என நான் எண்ணுகிறேன். இவன் பாவத்தை முழுவதுமாக விட்டுவிட்டான். பாவத்திற்கும் இவனுக்கும் இனிச் சம்பந்தம் இல்லை என்ற நிலை வரவேண்டும்.

"உனக்காக நான் என் இரத்தத்தைச் சிந்திவிட்டேன். மரித்து உயிர்த்தெழுந்து வந்திருக்கிறேன். இதற்குமேல் நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டிருப்பார் என எண்ணுகிறேன்.

சில வாலிபர்கள் இரகசியப் பாவத்தில் விழுவார்கள். யாருக்கும் தெரியாது. ஆண்டவரிடத்தில் வந்து கதறுவார்கள். சில மாதங்கள் கழித்துத் திரும்பவும் அதே பாவத்தில் விழுவார்கள். திரும்பவும் ஆண்டவரிடம் வந்து மன்னிப்புக் கேட்பார்கள். திரும்ப ஓடுவார்கள். எப்பொழுது விட்டுவிடுகிறாயோ அன்றைக்கு இரக்கம் பெறுவாய். அப்பொழுது உன்னுடைய பாதை அழகாயிருக்கும். ஆசீர்வாதமாக இருக்கும்.

தம்முடைய ஞானத்தின்படி உங்கள் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்!

ஆண்டவர் நீதிபரராய் இருக்கும்பொழுது, அவர் தன்

ஞானத்தின்படி உங்கள் பாதைகளைச் செவ்வைப்படுத்துவதை நீங்கள் பார்க்கலாம்.



"இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்.

அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்."

–அப். 10:1,2

"அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார் என்றார்கள்."

–அப். 10:22

கொர்நேலியு ஒரு நீதிமான். இவரிடம் ஒரு குறையும் இல்லை. ஆனால் இவனுடைய பாதையை இன்னும் செவ்வைப்படுத்தத் தேவன் விரும்புகிறார்.

"பகலில் ஏறக்குறைய ஒன்பதாம்மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும், பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு."

–அப்போஸ்தலர் 10:3

அவனிடத்திற்குத் தேவன் ஒரு தூதனை அனுப்பினார்.



"(பேதுரு) அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்யவேண்டியதை அவன்(பேதுரு) உனக்குச் சொல்லுவான் என்றான்."

–அப். 10:6

பின்பு பேதுருவை அழைத்து வரச் சொல்லுகிறார். பேதுரு வந்தவுடனே கொர்நேலியுவைப் பார்த்து, "இவர் தேவனுக்கு உகந்தவர்" என்று அறிந்து

கொள்ளுகிறார். அவருடைய வீட்டாரைப்பார்த்து:

“எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.”

-அப். 10:35



பேதுரு வந்தவுடனே கொர்நேலியுவுக்கு ‘‘தேவனுக்கு உகந்தவன்’’ என்கிற certificate கிடைத்தது. நீர் தேவனுக்கு உகந்தவன். ஆனால் “ஏதோ ஒரு காரியத்திற்காகத் தேவன் என்னை அனுப்பியிருக்கிறார்’’ என்று பேதுரு பிரசங்கம் பண்ணினார். பிரசங்கம் நடந்துகொண்டிருந்த பொழுதுதான் எந்தக் காரியத்தில் குறைவு இருந்தது என்பது தெரியவந்தது.

அங்கே ‘‘ஆவியானவருடைய அபிஷேகம், ஆவியானவரின் துணை கொண்டு ஓடுதல்” அங்குள்ள மக்களிடம் இல்லாமல் இருந்தது.

“இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார்.

அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்,

பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப் பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள்.’’

-அப். 10:44-46

இதில் கொர்நேலியு ஆவியானவருடைய துணை இல்லாமலே நீதியாய் ஓடுகிற நீதிமானாய் இருந்திருக்கிறார்.

நீங்கள் ஒருவேளை ஆவியின் துணையினால் உங்கள் ஓட்டத்தை ஓடாமல், ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் மாத்திரம் உங்களைச் சுத்திகரித்துக் கொண்டு ஓடுகிறவர்களாக இருக்கலாம்.

உங்களைப் பார்த்து ஆண்டவர், நீங்கள் நீதிமான்கள்தான். உங்களுடைய பாதை செம்மையாயிருக்கிறது.

உங்களுடைய கிரியைகளில் சரியாய் இருக்கிறீர்கள். ஆனால் உங்களிடம் ஒரு குறை இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள். என்னுடைய ஆவியின் வரம் உங்களுக்குத் தேவை என்கிறார்.

எங்களுக்குத் திருமணம் முடிந்தவுடனே நான் என் மனைவியிடம் ''நீ பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருக்கிறாயா? அந்நிய பாஷைகளைப் பேசுகிறாயா?'' என்று கேட்டேன். அதற்கு அவள், "நான் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறேன். ஆனால் அந்நிய பாஷையில் பேசுவதில்லை" என்றாள். ஆகவே அவ்வப்பொழுது அவளுடைய தலையில் கை வைத்து ஜெபிப்பேன். நாங்கள் இருவரும் இணைந்து அதிகமாக ஜெபம் செய்வோம். இரண்டு மாதத்தில் ஒருநாள் பல பாஷைகளைப் பேசுகிற ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொண்டாள்.

ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொண்டு, பல பாஷைகளைப் பேசி ஓடுகிற ஓட்டம் என்று ஒன்று இருக்கிறது. கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு (2கொரி. 3:17). உங்கள் பாதகளைச் செவ்வைப்படுத்துகிற, எங்கும் செழிப்பையும், ஆசீர்வாதத்தையும், ஜெயத்தையும் கட்டளையிடுகிற ஆவியானவருடைய நிறைவு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு சிலர் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கலாம். ஆலயத்திற்கு வரும்போது மாத்திரம் கொஞ்ச நேரம் அந்நிய பாஷைகளைப் பேசிவிட்டு, திரும்ப அடுத்த வாரம் ஆலயத்திற்கு வரும்போது திரும்பக் கொஞ்ச நேரம் அந்நிய பாஷைகளைப் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அப்படியல்ல. கர்த்தரே ஆவியானவர். கர்த்தரே முழுவதும் உங்களுக்குள்ளே இறங்கினால் எப்படியிருக்கும் பாருங்கள். ஆவியானவர் அப்படி இறங்க வேண்டும்.

ஆவியானவரின் நிறைவைப் பெற்று வாழுகிற வாழ்க்கைச் சிலருடைய கண்களுக்கு மறைவாக இருக்கிறது. ஆவியின் பெலத்தினாலே ஒவ்வொரு நாளையும் கடத்துங்கள். ஆண்டவர் உங்களுக்கு முன் செல்ல வேண்டும்.

இந்த உலகத்திலே ஏராளமான போட்டிகள், பொறாமைகள் நிறைந்திருக்கின்றன. உங்களுடைய சொந்த முயற்சிகளைப் பயன்படுத்தி வலையை வீசினால் மீன் கிடைக்காமல் கஷ்டப்படுகிற நபரைப்போல உங்களுடைய தொழிலில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கலாம்.

ஆவியின் பெலத்தினாலே நீங்கள் நிற்கும்போது, காடையைக் கொண்டு வந்து விழச்செய்ததைப்போல, மன்னாவை விழச்செய்ததைப்போல வல்லமை இறங்கும்.

சாதாரணக் கோலை எடுத்துக் கொண்டு ஆடு மேய்க்கப் போகிறார். கர்த்தர் அந்தக் கோலை ஆசீர்வதித்து, அந்தக் கோலைக்கொண்டு

அற்புதங்களைச் செய்யும்படிச் செய்தார். தேவனுடைய அபிஷேகம் இறங்கிவிட்டால் அற்புதங்களையும், ஆசீர்வாதங்களையும் பலத்த விதமாய்ச் செய்கிற ஒரு நபராக மாறி, உங்கள் வாழ்க்கைத் தலைகீழாக மாறிவிடும். ஆவியானவருடைய துணை உங்களுக்குத் தேவை.

சத்துரு வெள்ளம்போல வரும்போது, உங்களுடைய நீதியினால் கொடியேற்ற முடியாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆவியின் பெலத்தினால் நின்று கொடியைப் பிடியுங்கள். ஆவியானவர் கொடியேற்றுவார். அதன்பின்பு சத்துரு அந்தப் பக்கத்திலே வரவேமாட்டான்.

மீட்பர் இயேசுகிறிஸ்து சீஷர்களைப் பார்த்து, "நான் உயிர்த்தெழுந்ததைப் பார்த்து சந்தோஷப்பட்டு, எருசலேமை விட்டு உங்கள் சொந்தபந்தங்களைப் பார்க்கப் போகலாம் என்று புறப்பட்டு



விடாதீர்கள். எருசலேமில் தரித்திருங்கள். பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற, ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள காத்திருங்கள்" என்றார்.

ஆகவே நீங்கள் ஆவியானவரைப் பெற்றவர்களாயிருந்தாலும் அவருடைய நிறைவை இதுவரையிலும் பூரணமாய் அனுபவிக்காத நபர்களாய் இருக்கலாம். இன்றைக்கு ஆண்டவர் உங்கள் பாதைகளைச் செவ்வைப்படுத்துகிறார். மகாநீதிபரர் உங்கள் பாதைகளைச் செவ்வைப்படுத்துகிறார்.

பேதுரு கொர்நேலியுடன், "தான தருமம் நன்றாகச் செய்கிறீர். ஆனால் ஆவியானவர் இறங்க வேண்டும்" என்றார்.

"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்." – சங்கீதம் 34:19

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். இது அவர் உங்களுக்குத் தருகிற வாக்குத்தத்தம். மகா நீதிபரர் நீதிமானுடைய பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். உங்களுக்கு வருகிற பிரச்சனைகள் எத்தனையாக இருந்தாலும் அவை எல்லாவற்றிலிருந்தும் உங்களை விடுவிப்பார். அவர் உங்களோடு இருக்கிறார். அவர் உங்களை விட்டு விலகவும் மாட்டார். கைவிடவும் மாட்டார். ஆமென்!

■

தெரிந்து கொள்வோமா!

மனித உடல் பற்றிய சில வியத்தகு உண்மைகள்!

1. உடல் முழுவதும் ஆக்ஸிஜனைக் கொண்டு சேர்ப்பது ரத்தத்தில் உள்ள சிவப்பணு. இது உடலை ஒரு முறை சுற்றி வர எடுக்கும் நேரம் 60 நொடிகள்.

2. குழந்தை பிறக்கும்பொழுது அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும், வளர்ந்து பெரியவனானதும் மொத்தம் 206 எலும்புகளே இருக்கும். நமது உடல் எடையில் 14% எலும்புகளால் ஆனது.

3. உடலில் உறுதியான எலும்பு தொடை எலும்பு, அது கான்கீரிட்டைவிட வலிமையானது. அதே சமயம் நடுக்காதில் உள்ள ஸ்டெப்ஸ் (stapes) எனப்படும் எலும்பு பகுதி சிறியது மற்றும் லேசானது ஆகும். நமது உடலில் இருக்கும் எலும்புகளில், அதிகமானவை கைகளில் தான் இருக்கின்றன. இரண்டு கை மற்றும் கைவிரல்களில் மட்டும் 54 எலும்புகள் இடம் பெற்றுள்ளன. மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.

4. நமது உடல் எடையில் 7% இரத்தம் ஆகும். தினந்தோறும் 450 கேலன் இரத்தம் சிறுநீரகத்தால் சுத்தப்படுத்தப்படுகிறது. நமது உடலில் உள்ள இரத்த சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள், அதுபோல் ஒவ்வொரு நொடியிலும் சுமார் இரண்டு மில்லியன் இரத்தச் சிவப்பணுக்கள் நமது உடலில் இறக்கின்றன.

5. நமது உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் நீளம் சுமார் 600,000 மைல்கள். அதாவது இந்தத் தொலைவில் நாம் இரண்டு முறை உலகத்தைச் சுற்றி வந்து விடலாம்.

6. நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம். நமது கண்களுக்கு 500 விதமான ஒளிகளைப் பிரித்தெரியும் சக்தியுண்டு. கண்களில் உள்ள கருவிழி மட்டும்தான் இரத்ததானம் இல்லாத உயிருள்ள திசு.

7. மனித மூளை சுமார் 50,000 வாசனைத் திரவியங்களைக் கூட நினைவில் வைக்கும் திறன் படைத்தவையாம். உடல் எடையில் 2% மட்டுமே இருந்தாலும், மூளை உடலின் ஆக்ஸிஜன் மற்றும் ரத்த விநியோகத்தில் 20% பயன்படுத்துகிறது.

8. மூளை பயன்படுத்தும் சக்தி ஒரு 25 வாட் பல்பை எரிய வைக்கப் போதுமானது. உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் கட்டுப்படுத்தி, அவைகளிடம் வேலை வாங்குவது நமது மூளைதான். இதற்காக நமது மூளை நரம்பு மண்டலத்தைப் பயன்படுத்துகின்றது. மூளை மணிக்கு 375 கி.மீ வேகத்தில் தகவல்களை அனுப்புகிறது

9. மனித இதயம் நாளொன்றுக்கு 1,00,000 தடவைகள் துடிக்கிறது. சிறுகுடல் 750 செ.மீ நீளமுடையது. பெருங்குடலுக்கு 150 செ.மீ நீளம்தான். ஆனால் அது சிறுகுடலை விடவும் மூன்று மடங்கு அதிக அகலமானது.

10. நம் உடலில் நகங்கள், முடி மட்டும் வெட்ட வெட்ட வளர்கிறது. தாயின் வயிற்றில் குழந்தை இருக்கும் போதே நகமும் முடியும் வளர்கிறது.

11. தனது ஒரு பகுதி அகற்றப்பட்டாலும் கூட மீண்டும் தன்னைத்தானே உற்பத்தி செய்து கொள்ளும் உடலின் மிகப்பெரிய உறுப்பு கல்லீரல்.

12. நாளொன்றுக்கு 5 முதல் 6 லிட்டர் ரத்தம் 20 லட்சம் நெப்ரான்களால் 37 தடவைகள் சுத்திகரிக்கப்படுகிறது.

13. மனித உடல்களில் காணப்படும் தசைகளின் எண்ணிக்கை 639 ஆகும். மற்றத் தசைகளை விட கண் தசைகள் எந்நேரமும் சுறுசுறுப்பாகவும் விரைந்து இயங்கும் தன்மைக் கொண்டதாகவும் இருக்கின்றன. நமது கண்களுக்கு 576 megapixel பார்க்கும் திறன் உள்ளது. இதனால் நமது கண்களால் 10 மில்லியன் வண்ணம் வரைக்கும் வேறுபடுத்திப் பார்க்கமுடிகிறது. சராசரியாக 1 நிமிடத்திற்கு 20 முறை கண்களை இமைக்கின்றோம்.

14. பிறந்த குழந்தைகளுக்கு அதிகம் கண்ணீர் வராது. அது தகவல் பரிமாறுவதற்கே அழுகிறது. கண்ணீர் வருவதற்கு 4-13 வாரங்கள் வரை பிடிக்கும்.

15. ஒவ்வொரு நொடியும், மனித உடல் 25 மில்லியன் புதிய செல்களை உருவாக்குகிறது. மனித உடலில் சுமார் 60% தண்ணீரால் ஆனது. மனித உடலில் டிரில்லியன் கணக்கான பாக்டீரியாக்கள் வாழ்கின்றன. அவை நோயைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

உழியங்களில் கர்த்தர் செய்த கிரியைகள்!

35 வருட குடி, கஞ்சாப் பழக்கத்திலிருந்து விடுதலை!



நான் 35 வருடங்களாகச் சாராயம் மற்றும் கஞ்சாப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தேன். இன்னும் பல கெட்டப் பழக்கங்கள் இருந்தது. நான் காலை 4 மணி தொடங்கி மாலை வரை குடித்துக் கொண்டேயிருப்பேன். ஒரு பாக்கெட்டில் கஞ்சா மற்றொரு பாக்கெட்டில் சாராயம் வைத்து மாறி மாறி குடித்துக் கொண்டேயிருப்பேன். சகோதரனின் செய்திகளைக் கேட்டு வந்தேன். சில நேரம் அது என் உள்ளத்தைத் தொடும். நான் இந்தப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற என் மனைவியும் பிள்ளைகளும் கண்ணீர் விட்டு ஜெபிப்பார்கள். நான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டு விடுதலைக்காக ஜெபித்தேன். கர்த்தர் எனக்கு எல்லாப் பழக்கத்திலிருந்தும் பரிபூரண விடுதலை கொடுத்தார். விட முடியாத பாவங்களை விடுதலைப்பண்ண தேவனால் மாத்திரமே ஆகும் என்று நம்புகிறேன். கர்த்தருக்குக் கோடான கோடி ஸ்தோத்திரம் உண்டாவதாக!

– சகோ. டேனியல், வேலூர்.

GLORY TO GOD!

நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்!

சென்னை உபவாசக் கூட்டம் 28.06.2025

ஒவ்வொரு மாதமும் சென்னையில் நடைபெறுகிற ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் திரளான ஜனங்கள் கலந்து கொண்டு, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை & வீடு வாங்கக் கிருபை செய்தார்!



கடந்த வருடம் ஜனவரிமாதம் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன், “கர்த்தர் உங்களுக்கு வீட்டைக் கொடுப்பார்” என்று ஒரு பாடலைப் பாடி ஜெபித்தார்கள். “முழங்காலில் நின்று வீட்டைக் கட்டிடு ” என்ற பாடலை என் மனைவி பாடி ஜெபிப்பாள். சில மாதங்களில் கர்த்தர் ஒரு வீடு வாங்கக் கிருபைச் செய்தார். நாங்கள் நினைத்துப்பார்க்க முடியாத நிலையில் ஒரு வீடு வாங்கக் கர்த்தர் கிருபைச் செய்தார். நான் குடிப்பழக்கம், சிகரெட், பாக்கு மற்றும் புகையிலை என்று எல்லாப் பழக்கத்திற்கும் அடிமையாக இருந்தேன். இப்பொழுது எனக்கு எந்தப் பழக்கங்களும் இல்லை. கர்த்தர் என்னை விடுவித்தார். கர்த்தருக்குக் கோடான கோடி நன்றி! – சகோதரன் விஜய், பெங்களூர்.

தேவனுக்கே மகிமை!

நமது ஊழியங்களில் கர்த்தரின் கிரியைகள்!

பேரக்குழந்தைக்கு அற்புதம் செய்தார் தேவன்!



என் மருமகள் இரண்டாவது குழந்தை கர்ப்பந்தரித்திருந்தாள். ஸ்கேன் எடுத்தபோது, குழந்தைக்கு சுவாசக் குழாயும் உணவுக் குழாயும் ஒட்டி இருக்கிறது, தண்ணீர் போகும் பகுதி சரியாகத் தெரியவில்லை என்று மருத்துவர்கள் கூறினார்கள். கடந்த வருட ஆசீர்வாதப் பெருவிழாவில் என் மருமகளோடு கலந்து கொண்டேன். ஆண்டவரே, "மருத்துவர்கள் சொல்வது பொய்யாக வேண்டும், நீரே பெரிய மருத்துவர், ஒரு அற்புதம் செய்ய வேண்டும்" என்று ஜெபித்துச் சென்றேன். "பிரசவ நேரத்தில் 4 லட்சம் கையில் வைத்துக் கொள்ளுங்கள். குழந்தை பிறந்தவுடன் ஆப்ரேஷன் செய்ய வேண்டும்" என்று மருத்துவர்கள் கூறினார்கள். நானும் அவனுக்குச் சுகமாக வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். குழந்தை பிறந்தவுடன் வேறு மருத்துவமனைக்குக் கொண்டு போக வேண்டும் என்று ஏற்பாடு செய்துவிட்டுத்தான் பிரசவம் பார்த்தார்கள். குழந்தை பிறந்தவுடன் அருகில் உள்ள ஸ்கேன் சென்டரில் ஸ்கேன் எடுத்துப் பார்த்துவிட்டு வேறு மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்கிறோம் என்று ஒரு மருத்துவர் கூறினார். ஸ்கேன் எடுக்கும் இடத்தில் என் பேரன் திடீரென்று இருமி தும்மல் தும்மினான். பின்பு அவன் கையினாலே அதை எடுத்துப் போட்டான். அவனுடைய மூச்சுக் குழாயும் உணவுக் குழாயும் சரியில்லை என்றால் தும்மலும் இருமலும் வராது. "கர்த்தரே இந்த அற்புதத்தைச் செய்தார்" என்று என் மகனிடம் சொன்னேன். பின்பு ஸ்கேன் எடுத்துப் பார்த்துவிட்டு அவனுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை என்று மருத்துவர்கள் கூறினார்கள். இப்பொழுது என் பேரனுக்கு ஒரு வயது முடிந்து நல்ல சுகத்தோடு இருக்கிறான். நன்றாகச் சாப்பிடுகிறான், நன்றாகச் சுவாசிக்கிறான், நன்றாகச் சிரிக்கிறான். கர்த்தர் செய்த அற்புதங்களுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்! – சகோதரி ரூத் கலா, கே.கே நகர்.

வீடும், 100 ஆடுகளும் கொடுத்து ஆசீர்வதித்தார்!



மூன்று வருடங்களாகக் காட்டில் விளைச்சலே இல்லை. மிகுந்த வேதனை மற்றும் ஒன்றுமில்லாத நிலையில் இருந்தேன். ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் மூலமாக, "இரட்டிப்பான நன்மையைத் தருவேன் மற்றும் இடிந்த வீடு கட்டப்படும்" என்று கர்த்தர் பேசினார். ஒன்றும் இல்லாத எனக்கு 5 லட்சத்திற்கு வீடு மற்றும் 100 ஆடுகளையும் கொடுத்து என்னை உயர்த்தி வைத்திருக்கிறார். கர்த்தருக்குக் கோடான கோடி நன்றி! – சகோதரி வேடச்சி, விருதுநகர்.

10 வருடங்களாகக் கிடைக்காமல் இருந்த பென்ஷன் கிடைத்தது!



நான் இரண்டு மாதங்களாக உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டு வருகிறேன். 10 வருடங்களாகப் பென்சன் வராமல் இருந்தது. கடந்த மாதம் நான் ஜெப விண்ணப்பம் எழுதிக் கொடுத்துச் சென்றேன். அந்த மாதம் 12ஆம் தேதியில் பென்சன் வர ஆண்டவர் கிருபை செய்தார். நான் துக்கத்தோடு வந்தேன். இப்பொழுது சந்தோஷமாகத் திரும்புகிறேன். மகிழ்ச்சியாக உள்ளது. கர்த்தருக்குக் கோடான கோடி ஸ்தோத்திரம் உண்டாவதாக!

35 வருடத் தலைவலி சுகமானது!



எனக்கு 35 வருடங்களாக migraine தலைவலி இருந்தது. ஒவ்வொரு நாளும் மாறி மாறி வலிக்கும். மாத்திரைப் போடாமல் வேலை செய்யவே முடியாது. கடையை மூடிவிட்டு வீட்டில்போய்ப் படுத்துவிடுவேன். வலி தாங்கவே முடியாது. 6 மாதம் மருத்துவரிடம் சென்று மாத்திரை வாங்கிப் போடுவேன். பின்பு 6 மாதம் சித்த மருத்துவ மாத்திரைப் போட்டு வந்தேன். எந்த மருந்து போட்டாலும் நிரந்தரமாகச் சுகமாகவில்லை. ஒரு மாதத்திற்கு 6000 ரூபாய்ச் செலவாகும். இச்சூழ்நிலையில் இரண்டு மாதத்திற்கு முன்பு ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். எனக்கு இந்த ஒற்றைத் தலைவலி சுகமானால் நான் வந்து சாட்சி சொல்லுவேன் என்று பொருத்தனைச் செய்து ஜெபித்துச் சென்றேன். நான் இப்பொழுது இரண்டு மாதங்களாக எந்த மாத்திரையும் போடுவதில்லை. 35 வருட தலைவலியிலிருந்து கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரன் ராஜகோபால், ராமாபுரம்.

பல வருடங்களாக இருந்த காது அடைப்புச் சரியானது!



எனக்குப் பல வருடங்களாகக் காது அடைப்பு இருந்தது. நான் கடந்த மாதம் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டேன்.சகோதரன் ஜெபிக்கும் போது, “அடைக்கப்பட்ட செவிகள் எல்லாம் திறக்கப்படும் என்று ஆவியானவர் சொல்லுகிறார்” என்று சொன்னார்கள். அந்த நிமிடமே எனக்குக் காது அடைப்பு நீங்கி விடுதலை கிடைத்தது. அதன்பின்புதான் எனக்குச் சத்தம் கேட்டது. கர்த்தர் பெரிய சுகத்தைக் கொடுத்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

பயத்தின் ஆவியிலிருந்து விடுதலை!



எனக்கு அதிகமாகப் பயம் இருந்தது. திகிலோடுதான் இருப்பேன். நான் உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். ஜெபவேளையில், “சர்ப்பத்தைப் போல் பயம், திகில் எல்லாம் நீங்குகிறது” என்று சகோதரன் ஜெபித்தார்கள். சகோதரன் ஜெபித்தபோது அந்தப் பயமும், திகிலும் சர்ப்பம்போல் துள்ளி ஓடியதைப் பார்த்தேன். பின்பு எனக்குத் திகில் நீங்கி தைரியம் வந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

அற்புதமாகக் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார்!



நான் கர்ப்பமாக இருந்தபோது, எனக்குக் குறைப்பிரசவத்தில்தான் குழந்தை பிறக்கும். காதில் holes விழுந்திருக்கிறது என்று ஏதேதோ பிரச்சனைகளை மருத்துவர்கள் சொல்லிக்கொண்டிருந்தனர். ஆண்டவர் கிருபையாக 9 மாதங்கள் நடத்தினார். எல்லாரும் கைவிட்ட சூழ்நிலையில் நான் உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். ஆண்டவரே, “நிறை மாதத்தில் எனக்குச் சுகப்பிரசவத்தில் குழந்தை பிறக்க வேண்டும். வெட்கத்தினால் வீடு திரும்பாதபடிக்கு, எங்களுக்கு அல்ல கர்த்தாவே, உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும். எங்கள் குடும்பத்தின் மத்தியில் சாட்சியாக நிற்க வேண்டும்” என்று ஜெபித்தேன். அவ்வாறே கர்த்தர் எனக்குச் சுகப்பிரசவமாகக் கிருபைச் செய்தார். அற்புதமாகக் எந்தக் குறைவும் இல்லாமல் குழந்தையைப் பெற்றெடுக்கச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுப்பேன்.

‘நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.”
- எரேமியா 29:11

பிரியமானவர்களே, நீங்கள் எதிர்பார்த்திருக்கிற முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு அவர் உங்களை எப்பொழுதும் நினைத்திருக்கிறார். “உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை நான் அறிந்திருக்கிறேன்” என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் மனது விரும்புகிறதை, நீங்கள் எதிர்பார்த்திருப்பதைக் கொடுத்து உங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆண்டவர் தம் மனதில் நினைத்துக் கொண்டேயிருக்கிறார். அது தீமைக்கல்ல, சமாதானத்திற்கு ஏதுவானவைகள்தான்.

நீங்கள் எதிர்பார்க்கிற முடிவு, ஆண்டவர் கொடுக்கப்போகிற நன்மை தீமைக்கல்ல, அது சமாதானத்திற்கானது. எந்தக் காரியத்திற்காக நீங்கள் அநேக நாட்கள் எதிர்பார்த்து ஜெபித்துக் கொண்டு இருக்கிறீர்களோ, ஆண்டவரும் அந்தக் காரியத்தை மறக்கவேயில்லை. அதைக் குறித்தத் திட்டத்தை ஆண்டவர் தம்முடைய நினைவில் வைத்திருக்கிறார்.



சகோதரி சோபியா ஆலன்பால்

ஆண்டவர் சமுகத்தில் ஒரு சில காரியங்களுக்காக நாம் ஜெபித்துக் கொண்டேயிருக்கிறோம். அதற்குப் பதில் வரவில்லையென்றால், ஆண்டவர் இந்தக் காரியத்திற்கு என்ன பதில் கொடுக்கப்போகிறார்? என்ன முடிவைக் கொடுக்கப்போகிறார்? எனச் சந்தேகம் வரலாம். அவிசுவாசம் வரலாம். என்னுடைய ஜெபம்

கேட்கப்படவில்லை என்று சொல்லி, மனதில் சோர்வு வரலாம். ஆனால் ஆண்டவர், ''இல்லை, நீ ஜெபிக்கிற இந்தக் காரியத்திற்கு நல்ல முடிவைக் கொடுக்க வேண்டுமென்று உன்பேரில் நினைவாயிருக்கிறேன்'' என்று கூறுகிறார்.

எதிர்பார்த்த முடிவை வாய்க்கப்பண்ணுவார்!

பழைய ஏற்பாட்டில் எலியேசர் ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்குக்கு பெண் பார்க்கும்படி செல்லுகின்றார். அப்படிச் செல்லும்பொழுது, அவர் தன்னுடைய உள்ளத்தில் ஒரு தீர்மானம் எடுத்தார். ''இந்தத் துரவண்டையில் தண்ணீர் மொள்ள வருகிற பெண்களில் எந்தப் பெண் என் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்து. என்னுடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்க்கிறாளோ அந்தப்பெண்தான் என் எஜமானுடைய மகனுக்குத் தேவன் நியமித்தப் பெண்'' என்று எலியேசர் தன்னுடைய உள்ளத்திலே நினைத்துக் கொண்டதை நாம் பார்க்கிறோம்.

அவர் என்ன நினைத்தாரோ, என்ன எதிர்பார்த்தாரோ அதைப்போலவே ரெபெக்காள் அவருடைய தாகத்திற்கு தண்ணீர் கொடுத்து, ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்துக் கொடுத்ததை நாம் பார்க்கின்றோம். இதைத்தான் அடையாளமாக எலியேசரும் தம் மனதில் நிர்ணயம் பண்ணிக்கொண்டார். "இந்தப் பெண்ணை ஆண்டவர் என் எஜமானுடைய மகனுக்கு நியமித்திருந்தால் அது அப்படியே நடக்கட்டும்'' என்று உள்ளத்தில் எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிறார்.



எலியேசர் ரெபெக்காள் வீட்டிற்குச் சென்று அவளுடைய தாயின் வீட்டிலுள்ளவர்களிடம் மற்றும் சகோதரனிடம் நடந்த காரியங்களை விவரித்துச் சொல்லி, "நீங்கள் இந்தப் பெண்ணை என் எஜமான் ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்குக்கு கொடுக்க வேண்டுமென்றால் கொடுங்கள், இல்லை இஷ்டமில்லை என்றாலும் சொல்லி விடுங்கள். நான் என் வழியைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று எலியேசர் கூறினார். ஆனால் லாபானுடைய குடும்பத்தினர் பெண்ணை எலியேசரோடு கூட அனுப்பி வைத்ததை நாம் பார்க்கின்றோம். எலியேசர் தன் மனதில் நினைத்திருந்த நினைவுகளைத் தேவன் அப்படியே வாய்க்கச் செய்ததை நாம் பார்க்கிறோம்.

அதைப்போல நம்முடைய இருதயத்தில் ஒரு காரியத்தை எதிர்பார்த்துச் செயல்பட்டுக் கொண்டேயிருக்கிறோம். அந்தக் காரியத்தில் ஆண்டவருடைய கரம் செயல்படுவதை உணரமுடியாமல், பதில் வருவதை அறியமுடியாமல் இருக்கலாம். அதைத் தாமதிக்கின்றார் அல்லது அதற்கு

வேறு வகையில் பதில் தருகிறார் என்றால் அது தீமையாக முடியாதபடிக்கு, சமாதானமாக முடியும்படிச் செய்கின்றார்.

விரும்புவதற்கும் மேலாக ஆசீர்வதிக்கும் தேவன்!

நாம் ஒரு சிறிய காரியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். ஆனால் ஆண்டவர் அதில் ஒரு பெரிய நன்மையைக் கொடுக்க வேண்டும் என்று வைத்திருக்கலாம்.

விருதுநகரில் இயேசு நேசிக்கிறார் ஊழியத்தை ஆரம்பித்து ஓடிக்கொண்டிருந்த நாட்களில் முதலில் ஒரு சிறிய கட்டிடத்தில் இருந்தோம். அதன்பின்பு ஒரு வாடகைக் கட்டிடத்தில் இருந்தோம். வீடும் அலுவலகமும் அதில் சேர்ந்து இருந்தது. எங்களுக்கு வீட்டைக் கொடுத்திருந்தவர்கள் வெளியூர் சென்றிருந்தார்கள். திரும்பவும் அவர்கள் நாங்கள் ஊருக்கு வரப்போகிறோம். எங்களுடைய வீடு எங்களுக்கு வேண்டும் என்று சொன்னவுடனே, நாங்கள் காலிப் பண்ண வேண்டியதாயிருந்தது. அதினால் முகவரி எல்லாவற்றையும் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அப்பொழுது நாங்கள் நம்முடைய ஊழியத்திற்கென்று ஒரு சிறிய இடம் சொந்தமாக இருந்தால் இவ்வாறு முகவரி மாற்ற வேண்டிய அவசியம் இருக்காது என்று சொல்லி யோசித்துக் கொண்டு, அலுவலகம் கட்டுவதற்காக ஒரு சிறிய இடத்தைத் தேடித் தேடி அலைந்தோம். நிறைய இடங்களைப் பார்த்தோம். அதில் ஒரு சிறிய இடத்தை வாங்கும்படியாகப் பேசி முடித்து, அட்வான்ஸ் கொடுப்பதற்குச் சென்றபொழுது, அந்த நிலத்தின் சொந்தக்காரர், ''நாங்கள் கொடுத்த advance பணத்தில் 1000 ரூபாய் குறைவாக இருந்ததால் எங்களுக்கு நிலத்தைக் கொடுக்க முடியாது'' என்று சொல்லிவிட்டார்கள்.

நாங்கள் நிலம் வாங்குவதற்காக அநேக நாட்கள் வாஞ்சையோடு ஜெபம் பண்ணிக் கொண்டேயிருந்தோம். அதை வாங்க முடியவில்லையே என்று வருத்தத்தோடு இருந்தோம்.

திரும்ப நாங்கள் மிகவும் அழுது ஜெபித்தோம். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என் கணவர் மூலமாகப் பேசினார். "நீங்கள் சிறிய இடத்தைத் தேடி தேடி அலைந்தீர்கள். நான் உங்களுக்கு விருதுநகரின் enterenceல் பஸ் ஸ்டாப்புடன் ஒரு ஏக்கர் நிலத்தைத் தர வேண்டும் என்று திட்டம் பண்ணியிருக்கிறேன், எனவே கலங்காதிருங்கள்'' என்று கர்த்தர் பேசினார்.

அதைப்போலவே கொஞ்ச நாட்களிலே இப்பொழுது நம்முடைய Revival Prayer Centre இருக்கிற இடத்தைக் கொடுத்தார். அது



விருதுநகரின் நுழைவாயிலாக இருக்கிறது. ஒன்றேகால் ஏக்கர் நிலத்தைக் கர்த்தர் அருமையாக எங்களுக்கு வாய்க்கப்பண்ணினார். அங்குச் சமாதானமாக அலுவலகத்தைக் கட்ட உதவிச் செய்தார். இன்றைக்கும் ஏறக்குறைய 20 ஆண்டுகள் கடந்து விட்டது. அழகாக, அருமையாக ஊழியம் நடைபெறும்படிக் கர்த்தர் நடத்தி வருகின்றார்.

அதன்பின்பு அதற்கு அருகாமையில் உள்ள 5½ ஏக்கர் நிலத்தையும் கர்த்தர் கொடுத்தார்.


விருதுநகர்

சமீபத்தில் நம்முடைய விருதுநகர் சிறப்புக்கூட்டம் அங்கு வைத்து அருமையாக நடைபெற்றது.

ஆகவே நாம் எதிர்பார்த்திருக்கிற நன்மை சிறியதாக இருக்கலாம். சில நேரங்களில் அதைக் கொடுப்பது ஆண்டவருக்குத் தாமதமாகலாம் அல்லது அதைக் கொடுக்காமலும் இருக்கலாம். அப்பொழுது நாம், ''ஆண்டவர் நாம் கேட்டதற்கு பதில் கொடுக்கவில்லை, செவி கொடுக்கவில்லை'' என்று எண்ணிக் கொள்ளுகிறோம். நாம் கேட்ட நன்மையைக் கர்த்தர் கொடுக்கவில்லையே என்றுசொல்லி வேதனைப்படுகிறோம்.

அப்படியல்ல, ''நான் உனக்கு நன்மை செய்யும்படிக்கு, நீ எதிர்பார்க்கும் முடிவை உனக்குக் கொடுக்கும்படிக்கு உன்னைப் பற்றி நான் நினைத்துக் கொண்டேயிருக்கிறேன். உன்னுடைய ஜெபத்தை நான் மறக்கவில்லை. உன்னுடைய விண்ணப்பத்தை நான் மறக்கவில்லை. உனக்கு என்னத் தேவை என்பதையும் நான் மறக்கவில்லை. அவையெல்லாம் என்னுடைய நினைவில் இருக்கிறது. உன்னைப்பற்றி நான் நினைத்திருக்கிற நினைவுகளை நான் அறிவேன்'' என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நீங்கள் விரும்புகிறதற்கும் வேண்டுகிறதற்கும் அதிகமான நன்மையைக் கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பதற்கு வல்லவராய் இருக்கிறார்.

தேவமகிமை விளங்குவதற்கான தாமதம்!

நாம் லாசருவின் காரியத்திலே பார்க்கிறோம். ''நீர் சிநேகிக்கிற மனிதனாகிய லாசரு வியாதிப் பட்டிருக்கிறான்'' என்று அவனுடைய சகோதரிகள் இயேசுவுக்குச் சொல்லி அனுப்பினார்கள். ஆண்டவர் அதைக் கேட்டு, ''இந்த வியாதி தேவனுடைய நாமத்திற்கு மகிமையாக விளங்கும்'' என்று சொல்லி அமைதியாக இருந்தார். நாம் சொல்லி அனுப்பியதால், இயேசு மகாராஜா உடனே ஓடி வந்து,

லாசருவுக்காக ஜெபம்பண்ணி சுகமாக்கி விடுவார் என்று நினைத்து மார்த்தாளும், மரியாளும் அழுது புலம்பியிருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

அந்தக் காலத்தில் போன் வசதி கிடையாது. ஆட்கள் மூலமாகத்தான் செய்தியைப் பரிமாறிக் கொள்ளமுடியும். லாசரு வியாதிப்பட்டிருக்கிறான் என்று ஒரு நபர் மூலமாகச் சொல்லி அனுப்பினார்கள். ஆண்டவர் அதைக் கேட்டு, இன்னும் இரண்டு நாட்கள் அங்கே தங்கியிருந்தார் என்று பார்க்கிறோம்.

அதற்குப் பின்பு ஆண்டவர் சீஷர்களை "வாருங்கள், எருசலேமுக்குப் போவோம்'' என்று அழைத்தார். அவருடைய சீஷர்கள் அங்குச் செல்வதற்குப் பயந்தார்கள். எருசலேமிலிருந்து 2 கீ.மீ. தூரத்தில் தான் பெத்தானியா இருக்கிறது. அங்குப் போய்ப் பார்த்தபொழுது லாசருவைக் கல்லறையில் வைத்து நான்கு நாட்கள் ஆயிற்று என்று பார்க்கிறோம்.



அவன் வியாதிப்பட்டிருக்கும் போதேச் சொல்லி அனுப்பியிருந்தார்கள். அப்பொழுதே ஆண்டவர் வந்து சுகமாக்கியிருக்கலாமே என்று சொல்லி அவனுடைய குடும்பத்தார் எல்லாரும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஆண்டவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, நான்கு நாட்கள் கழித்து அந்த ஊருக்குப் போனார் என்று பார்க்கிறோம். அங்குப்போய் ஆண்டவர் லாசருவை உயிரோடே எழுப்பினார்.



மார்த்தாளும், மரியாளும் ஆண்டவர் வந்திருந்தால் என்னுடைய சகோதரன் மரித்திருக்கவே மாட்டான். ஆண்டவர் வந்து தொட்டு சுகமாக்கியிருந்தால் என்னுடைய சகோதரன் மரித்திருக்கவே மாட்டான் என்று சொல்லி, அவனுடைய சரீரத்தை அடக்கம் பண்ணிவிட்டு நான்கு நாட்களாகப் புலம்பியிருந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி யூதர்கள் அவர்களுடைய வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்று பார்க்கிறோம்.

கர்த்தர் இந்தக் காரியத்தில் என்ன முடிவைக் கொடுக்கப்போகிறார்? என்னுடைய சகோதரனை உயிரோடு காக்க முடியவில்லையே, மரித்துப் போய்விட்டானே, நான் எதிர்பார்த்த இந்தக் காரியத்திலே எனக்குச் சமாதானம் வரவில்லையே என்று சொல்லி, உங்களில் அநேகர் புலம்பிக்கொண்டு இருக்கலாம்.

இந்தக் காரியத்தில் இப்படி நடக்கும் என்று நினைத்தேன். இப்படி ஒரு ஆசீர்வாதத்தை எதிர்பார்த்தேன். அது பட்டுப்போனதைப்போல பட்டுப்போயிற்று. லாசரு மரித்துப் போனதைப்போல இந்தக் காரியம் மரித்து விட்டது. இனி எப்படி இது நடக்கும்? இனி உயிர்த்தெழுதல் நடக்கும்பொழுது நம்முடைய சகோதரன் எழுந்திருப்பான் என்று சொல்லி அவர்கள் அழுது கொண்டேயிருந்திருக்கலாம். நீங்கள் எதிர்பார்த்திருக்கிற முடிவு, அது தீமைக்கல்ல, உங்களுக்குச் சமாதானமாக எழுப்பிக் கொடுக்க முடியும். தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாக மரித்தாலும் உயிர்ப்பித்து நன்மையைக் கட்டளையிட ஆண்டவர் வல்லவர்.

எந்தக் காரியத்தில் நீங்கள் எதிர்பார்த்திருக்கிற ஆசீர்வாதங்கள், நன்மைகள் கிடைக்க முடியாதபடிக்கு அந்த எல்லைகள், வாசல்கள் பூட்டப்பட்டு ஒருவரும் திறக்கமுடியாதபடி இருந்தாலும் பரவாயில்லை. "கர்த்தர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்" (சங்கீதம் 33:9). திறக்கப்படாத வாசல்களையெல்லாம் கர்த்தர் திறப்பார். பூட்டியிருக்கிற வாசல்களைத் திறந்து உங்களுக்குச் சமாதானமான முடிவைக் கட்டளையிடுவார். நீங்கள் எதிர்பார்த்தைவிட, நீங்கள் நினைத்ததை விட அதிகமாய் உங்களுக்குக் கொடுப்பார். மனித மூளையில் நாம் போடுகிற திட்டங்களெல்லாம் மிகவும் சிறியதுதான். நமக்கு அது பெரியது. ஆனால் தேவனுக்கு அது சிறியது. ஆமென்!

சாட்சிகள்!

மகளுக்குக் கர்ப்பப்பைக் கட்டி மறைந்தது & மகளுக்கு அற்புதமாகக் குழந்தைபாக்கியம் கொடுத்தார்!



என் மகளுக்குக் கர்ப்பப்பையில் கட்டி இருந்தது. நான் மூன்று மாதமாக உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டு, "கர்ப்பப்பையில் உள்ள கட்டியை நீக்க வேண்டும்" என்று கண்ணீரோடு ஜெபித்தேன். கர்த்தர் சுகம் கொடுத்தார். கட்டியை நீக்கி விட்டார். பின்பு கர்ப்பப்பையில் கருமுட்டை வளரவில்லை என்று மருத்துவர்கள் கூறினார்கள். அதற்காகவும் உபவாசக்கூட்டத்தில் ஜெபித்தேன். மூன்றாவது மாதம் என் மகள் கர்ப்பந்தரித்தாள். அழகானப் பெண் குழந்தையைக் கர்த்தர் கொடுத்தார். கர்த்தருக்குக் கோடான கோடி நன்றி!

ஒரு வருட அரிப்பு வியாதி சுகமானது!



எனக்கு ஒரு வருடமாகத் தோலில் அரிப்புப் பிரச்சனை இருந்தது. மாத்திரை போடாமல் இருக்கவே முடியாது. மாத்திரைப் போட்டால் தூக்கமாக வரும். வேலை செய்ய முடியாது, ஜெபிக்க முடியாது. மிகவும் கஷ்டப்பட்டேன். நான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தேன். சகோதரன் ஜெபவேளையில், "அரிப்பு வியாதி இருக்கிறவர்களுக்கு ஆண்டவர் சுகம் தருகிறார்" என்று கூறினார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெபித்தேன். உபவாசக்கூட்டம் முடிந்த நாள் முதல் இன்று வரை மாத்திரையே எடுப்பதில்லை. கர்த்தர் எனக்கு அரிப்பு வியாதிலிருந்து சுகம் கொடுத்தார். கர்த்தருக்குக் கோடான கோடி ஸ்தோத்திரம் உண்டாவதாக! – சகோதரி தெபோராள், மணலி.

நமது ஆசீர்வாதம் தொலைக்காட்சி ஊழியத்தில் உங்கள் பங்கு!

கணக்கற்ற மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தேவஆசீர்வாதத்தைக் கொண்டு செல்லவும் காரணமாக இருக்கும் நமது ஆசீர்வாதம் டிவி ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்! ஒவ்வொரு மாதமும் இதற்காகச் செலவுபண்ணும் தொகை மிகவும் அதிகம். நமது தொலைக்காட்சியில் விளம்பரங்களோ அல்லது பண ஆதாயத்திற்கான எந்த நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படுவதில்லை. நிகழ்ச்சிகள், பாடல்கள் கொடுக்கும் தேவ ஊழியர்களிடம் ஒளிபரப்புத்தொகை எதுவும் வாங்குவதில்லை. மேலும் எந்த ஒரு நிறுவனத்தின் உதவியும் இதற்கு இல்லை. இந்த டிவி நிகழ்ச்சியின்மூலம் பிரயோஜனமடைந்து வரும் தேவப்பிள்ளைகள் 5 அப்பம் 2 மீனுக்கு அடையாளமாகக் கொடுக்கும் காணிக்கைகளைக் கொண்டுதான் இதன் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. Satelliteக்குச் செலுத்தப்படும் தொகை, கேபிள் டிவி இணைப்புகள் மற்றும் **DTH**ல் **(AIRTEL, SUN DIRECT)** ஒளிபரப்பப்படுவதற்காகும் செலவு, நிகழ்ச்சிகள் தயாரிப்புகளுக்காகும் செலவு, ஊழியத்தில் பணிபுரியும் சகோதர, சகோதரிகளுக்குக் கொடுக்கும் ஊதியம், உபகரணங்கள் பராமரிப்பு... என்று ஒவ்வொரு மாதமும் பல லட்சங்கள் தேவை உண்டு.

குக்கிராமங்களிலும் பட்டணங்களிலும் படித்த மற்றும் படிக்காத தேவப்பிள்ளைகளுக்கு வசனம் எளிதில் சென்றுசேர, கர்த்தர் இந்தக் கிருபையின் நாட்களில் நமக்கு ஈவாகக் கொடுத்திருப்பதுதான் ஆசீர்வாதம் டிவி ஊழியங்கள்! எனவே இந்த ஊழியத்தை ஒருவராய்ச் சுமப்பது அரிது.

"நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்." - ஏசாயா 32:20. "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.'' -2கொரி.9: 6,7. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

துதியுங்கள்! ஜெபியுங்கள்!

அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் (2கொரிந்தியர் 1:11).



அநேகருடைய ஸ்தோத்திரங்களினால் கிருபை பெருகும் (2கொரி. 4:15) என்று எழுதியிருக்கிறபடி தேவகிருபை, தேவதயவு, தேவமகிமை ஊழியத்திலும் எங்களிலும் பெருகும்படிக்கு எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் தினமும் குறைந்தபட்சம் 300 ஸ்தோத்திரபலிகளை நீங்கள் ஏறெடுக்கவும், குறைந்தது 15 நிமிடங்கள் விண்ணப்பங்களைத் தேவனிடத்தில் ஏறெடுக்கவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வெள்ளிக்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதம் டிவி ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்! செவ்வாய்க்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதத் திருச்சபை (சுமார் 600 கிளைத் திருச்சபைகள்) ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்!

நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்!



9952432020@tmb என்ற UPI ID

மூலமாக எந்த Payment Appலிருந்தும் பணம் அனுப்பலாம்.

G Pay PhonePe paytm

9952432020 (Blessing TV)
9345678981 (Allen Paul)

என்ற எண்ணிற்கு உங்கள் காணிக்கைகளை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம், Mobile Internet மூலம் காணிக்கை அனுப்பும் விபரம்:

www.blessingtv.tv/donation என்ற இணையதள முகவரியில் உங்கள் Debit card மூலம் நேரடியாகக் காணிக்கை அனுப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது.

வங்கி மூலம்

ICICI	TMB
'BLESSING TV'	'BLESSING TV'
A/C No. : 6172 0103 4129	A/C No. : 0041 5031 0875 177
BRANCH : SIVAKASI	BRANCH : VIRUDHUNAGAR
IFS CODE - ICIC 000 6172	IFS CODE : TMBL 000 0004

மணியார்டர் / eMo மூலம்

மணியார்டர் வாயிலாகக் காணிக்கை அனுப்புகிறவர்கள் நமது முகவரிக்கு நேரடியாகக் காணிக்கை அனுப்பலாம். மணியார்டர் படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உள்ள முழு முகவரியையும் பங்காளர் எண்ணையும் தெளிவாக எழுத மறவாதிருங்கள்!

டி.டி. / செக் மூலம்

டி.டி. மற்றும் செக் மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் 'BLESSING TV' என்ற பெயரில் உங்களுடைய டி.டி. மற்றும் காசோலையைத் தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பலாம்.



வங்கி மூலம் நேரடியாகக் காணிக்கைச் செலுத்துவோர், தயவாகத் தங்கள் ரசீதுதனை (ஜெராக்ஸ்) எங்களுக்கு அனுப்பி, ரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் இவ்வாறு அனுப்ப இயலாதவர்கள், கீழ்க்காணும் தொலைபேசி எண்களுக்கு SMS மூலமாக உங்கள் பெயர், முகவரி மற்றும் காணிக்கை விபரங்களை அனுப்பிவிடலாம். WhatsApp அல்லது இ-மெயில் மூலமாகவும் தெரியப்படுத்தலாம். Whatsapp : 9994079994, 9952432020.

முகவரி: பிளஸ்ஸிங் டி.வி., எழுப்புதல் ஜெப மையம், சூலக்கரை, விருதுநகர் – 626 003, தமிழ்நாடு. (அல்லது)
பிளஸ்ஸிங் டி.வி., எண். 3, இரண்டாம் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010, தமிழ்நாடு.
Our Address : BLESSING TV, REVIVAL PRAYER CENTRE, SOOLAKKARAI, VIRUDHUNAGAR - 626 003, TAMILNADU. (or)
BLESSING TV, No. 3, Second Street, Kilpauk Garden Road, Kilpauk, CHENNAI - 600 010, TAMILNADU.
Email : allenbtv@gmail.com Website : www.blessingtv.tv

மேலும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ள : 9994 07 9994 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை)

கிளை அலுவலகங்கள்!

கீழ்ப்பாக்கம்
எண். 3, இரண்டாம் தெரு,
கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு,
கீழ்ப்பாக்கம், சென்னை – 10.

எக்மோர்
No. 5A/5, காந்தி இர்வின் ரோடு,
இம்பீரியல் ஹோட்டல் அருகில்,
எக்மோர் ரயில் நிலையம் எதிரில்,
எக்மோர், சென்னை – 8.

தாம்பரம்
69, அரசன் காம்ப்ளக்ஸ்,
No. 70, G.S.T. ரோடு,
பஸ்டாண்டு – ரயில் நிலையம் எதிரில்,
மேற்குத் தாம்பரம்,
சென்னை – 45.

திருவான்மியூர்
எண். 121, 5வது கிழக்குத் தெரு,
காமராஜர் நகர்,
பாம்பே டையிங் பின்புறம்,
(பாங்க் ஆஃப் பரோடா எதிரில்)
திருவான்மியூர். சென்னை – 41.

நாகர்கோவில்
டேவிட் காம்ப்ளக்ஸ்,
WCC, ரோடு,
WCC, பஸ் நிறுத்தம் அருகில்,
நாகர்கோவில் – 1.

ஈரோடு
விஜி காம்ப்ளக்ஸ்,
இந்தியன் வங்கி எதிரில்,
பெரியார் நகர், ஈ.ரோடு – 638 001.

போரூர்
6/85, குன்றத்தூர் மெயின் ரோடு,
காவேரி ஸ்வீட் ஸ்டால் மாடியில்,
சென்னை மொபைல்ஸ் எதிரில்,
போரூர், சென்னை – 600 116

வேளச்சேரி
1A, 100 அடி, தரமணி லிங்க் ரோடு,
வேளச்சேரி விஜயநகர்
பஸ் டெர்மினஸ் எதிரில்,
வேளச்சேரி, சென்னை – 600 042.

பெரம்பூர்
No. 103, பெரம்பூர் வியாசர்பாடி
ஹை ரோடு, குமாரசாமி தெரு,
பஸ் டெர்மினஸ் to
P.P. ரோடு அருகில்,
பெரம்பூர், சென்னை – 600 011.

ஆவடி
No. 230, CTH ரோடு,
செக்போஸ்ட் அருகில்,
இம்மாகுலேட் பள்ளி எதிரில்,
ஆவடி, சென்னை – 600 054.

சேலம்
R.B.T. மால், முதல் மாடி,
A.R.R.S. மல்டி பிளக்ஸ் ரோடு,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
சேலம் – 4.

மும்பை
No. 10, 2வது மாடி,
கோல்டு பீல்டு பிளாசா,
சைன் பந்த்ரா லிங்க் ரோடு,
தாராவி, மும்பை – 400 017.

கோயம்புத்தூர்
நம்பர் 203, 2ஆவது மாடி,
ஸ்ரீவாசவி காம்ப்ளக்ஸ்,
பெரிய கடை வீதி,
மணிக்கூண்டு அருகில்,
கோயம்புத்தூர் – 641 001.

கோயம்புத்தூர் (காந்திபுரம்)
878, சத்தியமங்கலம்
மெயின் ரோடு,
G.P. மருத்துவமனை எதிரில்,
காந்திபுரம்,
கோயம்புத்தூர் – 641 012.

திருச்சி
ஸ்டோனி மெடோஸ், தரைத்தளம்,
169, 10வது மெயின் ரோடு,
E.S.I. மருத்துவமனை எதிரில்,
பொன் நகர், திருச்சி – 1

திருநெல்வேலி
16/40, திருவனந்தபுரம் ரோடு,
பாரத ஸ்டேட் வங்கி அருகில்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.

வேலூர்
No. 5, KGM. காம்ப்ளக்ஸ்,
ஆரணி ரோடு,
பாகாயம் பஸ்டாண்டு அருகில்,
பாகாயம், வேலூர் – 2.

திண்டுக்கல்
அல்லேலூயா ஹோம்,
A/56, MVM நகர்,
திண்டுக்கல் – 624 001.

மதுரை
தாமஸ் காம்ப்ளக்ஸ்
கீரேஸ் பல்மருத்துவமனை மாடியில்,
46, நேதாஜி ரோடு,
மதுரை – 625 001.

BLESSING CENTRE

39, மணலி நெடுஞ்சாலை, மஞ்சம்பாக்கம், மாதவரம், சென்னை – 60.

மேற்கண்ட ஆசீர்வாதம் டிவியின் கிளை அலுவலகங்களுக்கு நீங்கள் நேரில் சென்று உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளலாம். மேலும், சகோதரிகளாகிய உங்களுக்கு நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் அங்குச் சென்று தேவனுக்குத் துதி ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கலாம்.

அறிவியல் செய்திகள்!



ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் இணையம்!

ஸ்பேஸ்எக்ஸின் செயற்கைக்கோள் இணையச் சேவையான ஸ்டார்லிங்க் இலங்கையில் கால் பதித்தவுடன்,தற்போது மீண்டும் பேசு பொருளாகியுள்ளது பூட்டான் மற்றும் வங்கதேசத்துக்குப் பிறகு,தெற்காசியாவில் ஸ்டார்லிங்க் இணையம் தொடங்கப்பட்ட மூன்றாவது நாடாக இலங்கை உள்ளது. ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் தனது சமூக ஊடக தளமான எக்ஸில் ஸ்டார்லிங்க் இலங்கையில் கால பதிப்பதை அறிவித்தார்.

ஸ்டார்லிங்க் விரைவில் இந்தியாவிற்கும் வரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஸ்டார்லிங்க் தனது சேவைகளை இங்கு தொடங்க இந்திய தொலைத்தொடர்புத் துறையிடமிருந்து ஒப்புதல் பெற்றுள்ளதாக, செய்தி நிறுவனமான பிடிஐ செய்தி வெளியிட்டுள்ளது. சில காலத்திற்கு முன்பு ஏர்டெல் மற்றும் ரிலையன்ஸ் ஜியோ போன்ற பெரிய இந்திய தொலைத்தொடர்பு நிறுவனங்களும் ஸ்டார்லிங்க் தொடர்பாக ஸ்பேஸ்எக்ஸுடன் ஒரு ஒப்பந்தத்தை அறிவித்தன. தொலைதூரப் பகுதிகளிலும் அதிவேக இணையத்தை வழங்குவதற்காக, புவி வட்டப்பாதையின் குறைந்த உயரத்தில் (LEO) வடிவமைக்கப்பட்ட செயற்கைக்கோள் இணையச் சேவை தான் ஸ்டார்லிங்க்.

ஸ்டார்லிங்க் என்றால் என்ன?

ஸ்டார்லிங்க் என்பது இணையச் சேவையை வழங்கும் செயற்கைக்கோள்களின் வலையமைப்பு, இந்தச் சேவை ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. அதன் வலைத்தளத்தின்படி, "ஸ்டார்லிங்க் என்பது உலகின் முதல் மற்றும் மிகப்பெரிய செயற்கைக்கோள் விண்மீன் தொகுப்பு. இது ஸ்ட்ரீமிங், ஆன்லைன் கேமிங், வீடியோ அழைப்புகள் மற்றும் பலவற்றைச் செய்யக்கூடிய பிராட்பேண்ட் இணையச் சேவையை வழங்க, புவி வட்டப் பாதையின் குறைந்த உயரத்தைப் பயன்படுத்துகிறது" எனத் தெரியவருகிறது. இந்தச் சேவை 2019 ஆம் ஆண்டு தெடங்கப்பட்டது.





தற்போது இந்தத் தொலைத்தொடர்பு திட்டத்தின் கீழ் சுமார் 8 ஆயிரம் சிறிய செயற்கைக்கோள்கள் பூமியின் 'கீழ் சுற்றுப்பாதையில்' உள்ளன. இந்தச் செயற்கைக்கோள்கள் பொதுவாகப் பூமியின் மேற்பரப்பிலிருந்து 200-2000 கிலோமீட்டர் உயரத்தில் சுற்றுகின்றன. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், ஸ்டார்லிங்கில் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் 4.6 மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் இருந்தனர். யூடெல்சாட் ஒன்வெப் மற்றும் ஜியோ சேட்டிலைட் கம்யூனிகேஷன்ஸுக்குப் பிறகு இந்தியாவில் செயற்கைக்கோள் இணைய சேவையை வழங்க தொலைத்தொடர்புத் துறையிடமிருந்து உரிமம் பெற்ற மூன்றாவது நிறுவனமாக ஸ்டார்லிங்க் உள்ளது.

செயற்கைக்கோள் இணையம் எவ்வாறு செயல்படுகிறது?

பயனரின் சாதனத்திலிருந்து விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்களுக்கு சிக்னல்களை அனுப்புவதன் மூலம் இந்தச் செயற்கைக்கோள் இணையம் செயல்படுகிறது. இது இணையத்துடன் இணைக்கப்பட்டு, நிலத்தில் அமைந்துள்ள நிலையத்திற்கு தரவை அனுப்புகிறது நிலத்தில் உள்ள நிலையம் இந்தத் தரவைச் செயற்கைக்கோள் வழியாகப் பயனரின் டிஷுக்கு திருப்பி அனுப்பி இணைப்பை நிறைவு செய்கிறது. அது உயர் பூமி சுற்றுப்பாதையில் (HEO) இருக்கும் செயற்கைக்கோள்களைப் பயன்படுத்துகிறது. இந்தச் செயற்கைக்கோள்கள் பூமியின் மேற்பரப்பிலிருந்து 30 ஆயிரம் கிலோமீட்டர் உயரத்தில் சுழல்கின்றன.

ஸ்டார்லிங்க் இந்தியாவிற்கு வந்தால் என்ன நடக்கும்?

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், இந்தியாவின் இரண்டு பெரிய தொலைத்தொடர்பு நிறுவனங்களான ஏர்டெல் மற்றும் ரிலையன்ஸ் ஜீயோ ஆகியவை ஸ்டார்லிங்குடன் தனித்தனி ஒப்பந்தங்களைச் செய்தன. ஆனால்,ஸ்டார்லிங்கின் உபகரணங்களை இந்திய இணையம் மற்றும் மொபைல் சங்கம், சந்தைப்படுத்தல் தரவு மற்றும் பகுப்பாய்வு நிறுவனமான காந்தர் உடன் இணைந்து ஒரு அறிக்கையை வெளியிட்டது. இதன்படி, 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவில் இணையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 90 கோடியைத் தாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் 2021 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தனது செயற்கைக்கோள் இணைய சேவையைத் தொடங்க முயற்சித்து வருகிறது. ஆனால் இன்னும் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

"4ஜி மற்றும் 5ஜி கோபுரங்கள் இல்லாத தொலைதூரப் பகுதிகளில், அவற்றை நிறுவ முடியாத இடங்களில், பைபர் ஆப்டிக் கேபிள்களை அமைக்க முடியாத இடங்களில் இந்தச் செயற்கைக்கோள் அடிப்படையிலான சேவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிடுகிறார். தொலைதூரங்களில் உள்ள முகாம்களிலும் இணைய இணைப்பு கிடைக்கும் என்பதால், இது நமது ராணுவத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்" என்று அவர் கூறுகிறார்.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

தேவனுக்கே மகிமை!

24 மணி நேர தமிழ் கிறிஸ்தவ செயற்கைக்கோள் தொலைக்காட்சி (Satellite TV) பார்த்துப் பயனடையுங்கள்!

ஆசீர்வாதம் TV

இப்பொழுது, நமது ஆசீர்வாதம் டிவி

SUN DIRECT

சேனல் நம்பர் 459லும்

airtel digital TV

சேனல் நம்பர் 814லும்

வருகிறது.

அனைத்து கேபிள்களிலும் ஒளிபரப்பப்படுகிறது.

தேவப்பிள்ளைகள் பார்த்துப் பயனடையுங்கள்!
ஆசீர்வாதம் பெறுங்கள்!

For any Details Please Contact:
9994 73 9994

சென்னை ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை!



ஆசீர்வாதத் திருச்சபைக்கு வாருங்கள்!

நீங்கள் விடுதலையோடு ஆராதிக்கவும்,
ஆழ்ந்த சத்தியங்களைக் கேட்கவும்,
ஆவியில் நிறைந்து ஜெபிக்கவும்,
தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவும்
ஒவ்வொரு வாரமும்
ஆசீர்வாதத் திருச்சபையின்
ஆராதனையில் பங்கு பெற
அன்புடன் அழைக்கின்றோம்.

சென்னை ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரங்கள்!



முதல் ஆராதனை :
காலை 6 மணிக்கு

இரண்டாம் ஆராதனை :
காலை 10 மணிக்கு

ஆசீர்வாதத் திருச்சபைகள்

சென்னை:	விருதுநகர்:	மும்பை :
தூய ஜார்ஜ் மேல்நிலைப்பள்ளி வளாகம், பச்சையப்பன் கல்லூரி எதிரில், பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 10.	எழுப்புதல் உபவாச மையம், விருதுநகர்.	நம்பர் 10, 2வது மாடி, கோல்டு பீல்டு பிளாசா, சைன் பந்த்ரா லிங்க் ரோடு, தாராவி, மும்பை - 400 017.

மேலும் விபரங்களுக்கு : 93456789 83, 9994 07 9994